*KALAM - International Research Journal*
*Faculty of Arts and Culture,*
*South Eastern University of Sri Lanka.*
*13(4), 2020*

# சடங்குகள் உணர்த்தும் தமிழர் தத்துவ அழகியல் மரபு

**வடிவேல் இன்பமோகன் & மும்தாஜ் சமீம்**
**கலை கலாசார பீடம்**
**கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.**

Correspondence: vinpamohan@yahoo.com

**ஆய்வுச் சுருக்கம்**

சடங்குகள் சமூக வாழ்வில் முக்கியமானதொரு வடிவமாக ஒவ்வொரு பண்பாட்டிலும் பேசப்பட்டு வருகின்றன. மனித சமூகத்தின் வாழ்வியல் கூறுகள் பலவற்றையும் உள்ளடக்கிய வடிவமாக அவை நிலைகொண்டுள்ளது அவற்றின் சிறப்பாகும். சமூகங்கள் காலத்திற்குக் காலம் சமூக வளர்ச்சியில் மாற்றங்களைப் பெற்று வளர்ச்சியடைந்து நாகரிக சமூகங்களாக மேம்பட்டுக்கொண்டாலும் சமுகங்களில் நிலைகொண்டுள்ள சடங்குகள் பல உயிர்ப்பான அம்சங்களை உள்ளடக்கிய வடிவங்களாகத் தொழிற்படுகின்றன. சமூக மாற்றச் செயற்பாட்டின் போது சமூகங்களின் பாரம்பரிய மரபுகளையும் வழக்காறுகளையும் தாங்கியவையாக சடங்குகள் செயற்பட்டுக் கொண்டிருக்கும். இது சடங்குகளின் உயிர்ப்பான இயல்பு. நீண்ட சமூக வளர்ச்சியைக் கொண்ட தமிழர் சமூகத்தில் நிலைகொண்டுள்ள தத்துவ சிந்தனை மரபு, அழகியல் மரபு என்பவற்றையும் அவற்றின் அறாத் தொடர்ச்சியையும் இந்த ஆய்வு இனங்காண முயற்சிக்கும். இந்த முயற்சி சடங்குகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது. இந்த ஆய்வில் தமிழ் சமூகம் பற்றிய சான்றுகளை எடுத்தியம்பும் சங்க இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழர் தத்துவம் பற்றியும் அழகியல் பற்றியும் முன்மொழியப்படும் கருத்துக்கள் கண்டறியப்படும் அல்லது புரிதலுக்குட்படுத்தப்படும். அப்புரிதலை அடிப்படையாகக் கொண்டு சமகாலத்தில் கிழக்கிலங்கை சமூகத்தில் நிகழ்த்தப்படும் சடங்குகள் பற்றிய அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு முடிவுகள் முன்னொழியப்படும். இதன் மூலம் தமிழர் தத்துவ அழகியல் மரபின் இடையறாத் தொடர்ச்சியும் அவற்றின் இயல்புகளும் விவாதிக்கப்பட்டு எடுத்துரைக்கப்படும். இது ஒரு பண்புசார் ஆய்வாக அமைகின்றது. கிழக்கிலங்கைச் சடங்கு தொடர்பான நேரடி அவதானிப்பு தகவல் வழங்கிகளுடனான கட்டமைக்கப்படாத நேர்காணல், குழுநிலைக் கலந்துரையாடல் என்பன தகவல்களை உறுதிப்படுத்த ஆய்வுக் கருவிகளாகப் பயன்படுத்தப்படும். பண்புசார் அடிப்படையில் முடிவுகள் பெற்றுக் கொள்ளப்படுவதுடன் பரிந்துரைகளும் முன்வைக்கப்படும். தமிழர் பாரம்பரியத்தில் காலம் காலங்காலமாக ஒரு தத்துவ அழகியல் மரபு பேணப்பட்டு வந்துள்ளது என்பது ஆய்வின் மூலம் உறுதிப்படுத்தப்படும்.

**பிரதான சொற்கள்:** சடங்கு, அழகியல் மரபு, தத்துவ மரபு, உருமாற்றீட்டு அழகியல், கோயில் சடங்குகள்.

## 1. அறிமுகம்

நீண்ட வரலாற்றுத் தொடடுச்சியைக் கொண்ட தமிழ் சமூகத்தின் வரலாற்றில் ஒரு தத்துவ மரபு வளர்ச்சியடைந்துள்ளதை இனங்காணமுடியும். தத்துவம் என்ற சொல்லுக்கு உலகக் கண்ணோட்டம் என்றொரு விளக்கமும் உள்ளது. தமிழ் சமூகத்தின் சிந்தனைகள், அதன் பேறாக அவர்கள் உருவாக்கிக் கொண்ட நம்பிக்கைகள், உலகியல் வாழ்க்கை முறைகள் ஆகிய அனைத்தையும் தழுவியதாகவே தமிழ் மக்களின் தத்துவ மரபைப் புரிந்துகொள்ள வேண்டும். இவ்வுலக வாழ்வியல் அனுபவமும், இவ்வுலக வாழ்க்கையுமே தமிழ் மக்களின் பிரதான அக்கறைக்குரிய விடயமாக அமைந்திருந்தது.

தத்துவம் என்ற உலகப் பார்வையின் உள்ளடக்கக் கூறுகளில் ஒன்றாக இருப்பது அழகியலாகும். தமிழ் அழகியலைக் கட்டமைப்பதில் சங்கப்பாடல்கள் தொல்காப்பியம் என்பன அடிப்படையானவையாக அமைந்திருந்தன. சங்க இலக்கியம் உலகின் அழகியல் நலன்களைக் கண்டறிந்து அவற்றைத் தனதாக்கிக் கொள்வதிலும் அழகியல் ஆற்றலைக் கலைவயப்படுத் துவதிலும் சில தனித் தன்மைகளைக் கொண்டிருந்தது (நடராசன், 2016:02). பொதுவாகத் தமிழ் மரபில் அழகியல் பற்றிய விளக்கம் சுவை தொடர்பானதாக அமைந்திருந்தது.

தமிழ் மக்களின் உலக நோக்காக அமைந்த தத்துவ மரபு, உலகியல் விடயங்களை அனுபவத்திற்குள்ளாக்கிய முறையான அழகியல் பற்றிய கருத்துருவாக்கம் என்பன தமிழ் மக்களின் வாழ்வியல் செயற்பாடுகளுடன் பின்னிப் பிணைந்தனவாகக் காணப்பட்டன. இவற்றை அம்மக்களின் வாழ்க்கை பற்றிய பதிவாக விளங்கிய இலக்கியங்கள் பதிவு செய்தன.

புராதன சமூகத்தில் இருந்து இன்றைய சமூக வாழ்வியல் வரை சடங்குகள் முக்கியமான ஒரு இடத்தைப் பிடித்துள்ளன. இவ்வாய்வில் தமிழரின் அழகியல், தத்துவ பாரம்பரியம் பற்றிய உரையாடலை தமிழர் சமூகத்தில் வேரூண்றியுள்ள சடங்குகளை அடிப்படையாகக் கொண்டு நோக்கப்படுகிறது. தமிழர் சமூகத்தில் பயில்வில் உள்ள சடங்குகள் அம்மக்களின் சமூக வாழ்வியலில் அடிப்படையான சக்திகளாகத் திகழ்கின்றன. சமூக உறுப்பினர்களின் ஒன்றிணைவில் நிகழ்த்தப்படும் சடங்குகள் அச்சமூக உறுப்பினர்களின் வாழ்வியல் அடையாளங்களான சமய நம்பிக்கை, தத்துவ நோக்கு, கலை, அழகியல் நோக்கு, வாழ்வில் நெறிப்படுத்தும் சட்டதிட்டங்கள், மொழியின் செந்நெறிக் கூறுகள், அறிவியல் கருத்துக்கள், வைத்திய மரபு என் பல அம்சங்களையும் தாங்கிய வடிவமாகத் திகழ்கின்றன.

## 2. தமிழர் பாரம்பரியத்தில் சடங்குகள்

தமிழ் சமூகத்தின் தொடக்ககாலப் பதிவாக விளங்கும் சங்க இலக்கியங்களில் இருந்து தமிழரின் சடங்கு பற்றிய மூலங்களைக் கண்டு கொள்ளலாம். சங்க இலக்கியம் குறிப்பிடும் வேலன் வெறியாடல், போர்க்கள வேள்விகள், தைநீராடல் மற்றும் சிலப்பதிகாரம் வேட்டுவவரி, ஆச்சியர் குரவை போன்றவற்றின் மூலம் புராதன மக்களின் சடங்கு பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்கின்றோம். இச்சடங்குகளின் நீட்டி இன்றைய தமிழ் சமூகம் வரை தொடர்கின்றது. இன்று தொடரப்படும் சடங்குகள் பண்டைய சமூகத்தால் மேற்கொள்ளப்பட்ட சடங்குகளின் அத்தனை அம்சங்களையும் உட்கொண்டனவாகக் காணப்படுகின்றன. இவ்வாய்வில் கிழக்கிலங்கைச் சடங்குகள் மையப்படுத்தப்படுகின்றன.

கிழக்கிலங்கையில் கோயில் சடங்குகள் அவர்களின் சமூக வாழ்வியலில் அடிப்படையானதும் அவசியமானதும் ஒன்றாக விளங்குகின்றது. சடங்கில் கண்ணகியம்மன், மாரியம்மன், திரௌபதியம்மன், பேச்சியம்மன், காளி, கடலாச்சியம்மன், நாககன்னி, நரசிங்க வைரவர், பெரிய தம்பிரான், குமாரர், வதனமார் என்பன வழிபடப்படும் பிரதான தெய்வங்களாக விளங்குகின்றன. அத்தெய்வ வழிபாட்டுடன் இணைந்ததாக வேறுபல தெய்வங்களும் வழிபடப்படுகின்றன. இவர்களின் வழிபாட்டை முன்நின்று நடத்துபவர் பூசாரி, கப்புகன், கட்டாடி என பல பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டாலும் அடிப்படையில் ஒரே இயல்பைக் கொண்டவராகவே விளங்ககின்றார். தெய்வமாடல், பலியிடல், கட்டுச் சொல்லல் (வாகுக்கு கூறுதல்), நேர்த்தி நீர்த்தல், என்பன வழிபாட்டில் பிரதானம் பெறுவதுடன் வழிபாட்டிடம் கும்பம், மடை வைத்து, முகக்களை என்பன வைத்து வழிபடப்படும். சடங்கு வழிபாட்டில் திருவுருவங்களை வைத்து வழிபடும் வழக்கம் பிரானம் பெறுவதில்லை. இயற்கையின் கூறுகள் சடங்கு வழிபாட்டில் தெய்வமாகக் கருத்துருப்படுத்தி வழிபடப்படல் இவ்வழிபாட்டில் உள்ள சிறப்பாகும்.

## 3. சடங்குகளும் தமிழர் தத்துவ மரவும்

உடல்-உளத் தேவைகளின் பூர்த்தியாக்கமும் அத்தேவைகளுக்கு தடையேற்படும்போது அதனைத் தீர்ப்பதற்கான இயல்பூக்க வெளிப்பாடுகளும் பிரதான செயற்பாடாக விளங்கின. இத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் தடைகளில் இருந்து மீள்வதை நோக்காகக்

கொண்டுமே சடங்குகள் நிகழ்த்தப்பட்டன. சடங்கு வழிபாட்டின் அடிப்படையாக இவ்வுலகில் மக்கள் வாழ்வதற்கான அடிப்படைகளை ஏற்படுத்திக் கொடுப்பது அமைந்திருந்தது. உலக வாழ்வின் ஒவ்வொரு செயற்பாடுகளும் தெய்வங்களால் ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன என்பது மக்களின் நம்பிக்கை. பருவ கால மாற்றங்கள் வராது உலக ஒழுங்பை பேணுவதில் இத்தெய்வங்களின் இடம் முக்கியமானது என நம்பினர். உலக ஒழுங்கு சிறப்பாக அமைவதற்கு நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் இயற்கையின் கூறுகளின் (ஐம்பூதங்களின்) செயற்பாடும் அடிப்படையானது எனக் கருதிய மக்கள் அவற்றின் ஒழுங்கைப் பேணுவதில் அவற்றுடன் தொடர்புடைய தெய்வங்கள் பிரதான பங்கு வகிக்கின்றன என நம்பினர். சடங்குகளில் இவ் உலகு பற்றிய கருத்தியல் இளையோடுவதை அவதானிக்கலாம். மக்கள் வழிபடும் தெய்வங்கள் இயற்கையின் ஆற்றல்களைக் கொண்டனவாக விளங்கின. அவற்றுக்கு மாரியம்மன், கடலாச்சியம்மன், காளி, கண்ணகியம்மன் எனப் பெயர்கள் இட்டு ஒவ்வொன்றையும் இயற்கையின் தேவைகளைப் பூர்த்தி செய்து தரும் தெய்வங்கள் எனக் கருதினர்.

சடங்கின் மூலம் வழிபடப்படும் அதிகமான தெய்வங்கள் பெண் தெய்வங்களாகவே விளங்குகின்றன. இத்தெய்வங்களை தீமை விளைவிக்கும் இயல்புடயனவாகவே மக்கள் கருதினர். இருந்தும் உரிய சடங்களின் மூலம் அவற்றைச் சாந்தப்படுத்தி நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர்கள் கருதினர். இயற்கை நெறிக்காலப்பகுதியில் தோற்றம் கொண்ட தெய்வங்கள் பெண் தெய்வங்களாக உருப்படுத்தப்பட்டமைக்கு பெண் பற்றிய அக்காலக் கருத்தமைவும் பெரும் பங்காற்றியுள்ளது. ஒரு பெண்ணின் நிலைமையைப் பொறுத்து, அவள் நன்மையும் தீமையுமான முரன்நிலை விளைவுகளைத் தரவல்லவள் எனவும், தீமை விளைவிக்கும் ஆற்றலால் பீடிக்கப்பட்டால் கேடு விளைவிப்பவளாகவும், தூய்மை அவளுக்கு தெய்வீக ஆற்றலைக் கொடுப்பதாகவும் அக்கால மக்கள் நம்பினர். கேடு விளைவிக்கும் தெய்வங்களைச் சாந்தப்படுத்தி வாழ்க்கை அனுகூலங்களைப் பெற்றுக்கொள்வதற்கு சடங்குகள் உதவுகின்றது (கிருஷ்ணராஜா, 2007:34) என நம்பினர்.

தெய்வங்கள் அருவ நிலைப்படுத்தப்பட்டவையாக இருந்த போதிலும் ஒவ்வொரு தெய்வத்தையும் மக்கள் அவர்களின் உறவினர்களின், சமுக உறுப்பினர்களில் கண்டு வழிபட்டல் சடங்கு வழிபாட்டில் தெய்வங்களை மக்களுக்கு அன்மையில் கொண்டு சேர்த்துவிடுகிறது. தெய்வங்கள் தமக்கு நெருக்கமானவர்களின் உடலில் புகுந்து மக்களின் தேவைகளை நிறைவேற்றும் எனக் கருதினர். தெய்வங்களை மனிதருள் வரவழைத்து தெய்வங்களை வழிபடுவதற்கான அடிப்படைகளை ஏற்படுத்திக் கொடுப்பவராக மதகுரு விளங்கினார். மதகுரு தெய்வத்திற்கும் மக்களுக்கும் இடையே நின்று செயற்பட்டு மக்களின் வாழ்விற்கும் இயற்கை ஒழுங்கைச் சரியாகப் பேணுவதற்கும் துணைபுரிவார். தெய்வீக உலகிற்கும் இயலுலகிற்கும் இடையே தொடர்பை ஏற்படுத்தி நிற்பவராக கொள்ளப்படுகின்றார். மக்கள் அவர்கள் உண்ணும் உணவையும் இயற்கைச் சூழலில் கிடைக்கும் பொருட்களையும் தெய்வத்திற்கு வழங்கி வழிபட்ட நிலை தெய்வத்திற்கு மக்களுக்கும் இடையேயான இடைவெளியைக் குறைத்திருந்தது. மகாமாரித் தேவி திவ்யகரணியில் வரும் பாடல்கள் மூலம் இதனை விளங்கிக் கொள்ளமுடியும் (கணபதிப்பிள்ளை, 1972:115). இது ஏனைய சமயங்களின் தெய்வம் பற்றிய நோக்கில் இருந்து மாறுபட்டது.

இயற்கைக்கும் மக்களுக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்தி நிற்பவராக மதகுருவாகிய பூசாரி (Shaman) கொள்ளப்பட்டான். சடங்கு வழிபாட்டில் மதகுருவின் இடம் எப்போதும் தனித்துவமானது. இவரிடம் உலகு பற்றிய பல்வேறு விதமான முன் அறிவும் காணப்பட்டது. இந்த அறிவு பிரபஞ்சத்தின் தொடர்ச்சியான செயற்பாடு பற்றியதாக அமைந்திருந்தது. மதகுருமார் அறிவின் மையமாக நோக்கப்பட்டனர். மற்றயவர்களுடன் தொடர்பு கொள்வதற்கான சக்தியைப் அவர்கள் பெற்றிருந்தனர். அவர்களின் ஆவியை இன்னொரு உயிருக்கு மாற்றும் வல்லமை அவர்களிடம் இருந்தது. மதகுருவின் ஆவி மாற்றப்பட்ட உயிரினம் இன்னொரு உலகத்திற்கோ தெய்வத்திற்கோ பறந்து செல்லும் என நம்பினர். மதகுரு வைத்தியராகவும், தேர்ந்த மந்திர ஆற்றல் உள்ளவராகவும் காணப்பட்டார் (Wright, 2013:33). சடங்கு நிகழ்த்தும் சமூகத்திற்கு ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளையும் தீர்த்து மக்களை வழிப்படுத்தும் ஆற்றல் மதகுருவிடம் காணப்பட்டது.

இவ்வழிபாட்டில் இடம்பெறும் பலியிடல், வாக்குச் சொல்லல் (குறிசொல்லல்), நிமிர்த்தம் பார்த்தல் ஆகிய நம்பிக்கைகள் அச்சுறுத்தலை விலக்கவும் விருப்பங்களைப் பூர்த்தி செய்யவும் மக்கள் கையாண்ட நுட்பங்களாக விளங்கின. மக்கள் சடங்கு காலத்தில் தமது குற்றம், துன்பம், நோய் ஆகியவற்றை பிரிதொரு உயிர்ப் பொருளுக்கு இடம் மாற்றி, அதனை அகற்றும் முகமாக அவ்வுயிர்ப் பொருளை பலியிடுதல் இம்மக்களின் நம்பிக்கையாகும். பருப்பொருளுக்கும் உளஉணர்விற்கும் சடத்திற்கும் சடப்பொருள் அல்லாததற்கும் இடையிலான வேறுபாட்டை உணரா மயக்கத்தின் விளைவாக, வண்டியில் பொருட்களை ஏற்றுவது போல தமக்குத் தீங்கு பயப்பவற்றை பிரிதொரு உயிர்ப்பொருளில் சுமத்தி, தன்னை வருத்தும் துன்பத்தையும் நோயையும் தனக்காக அப் உயிர்ப்பொருள் அனுபவிக்குமாறு செய்தல் என இச்செயற்பாட்டை ஜேம்ஸ் பிரேசர் குறிப்பிடுவார் (கிருஷ்ணராஜா, 2007:29).

சடங்கு வழிபாட்டுக்குரிய தெய்வங்களின் ஆற்றல் அம்மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை முன்னறிந்து தெரியப்படுத்வதும் அதற்கான தீர்வுகளை முன் மொழிவதுமாகவே அமைந்திருந்தது. இதனையே கட்டுச் சொல்லல் என்கின்றோம். பிரச்சினையைக் கண்டறிதல், அதற்கான பரிகாரத்தை சடங்கின் மூலம் நிறைவேற்றல், பின் இயல்பு வாழ்க்கையை எவ்வித பிரச்சியையும் இன்றி முன்னெடுப்பதற்கு உதவுதல் என்பன தெய்வங்களின் செயற்பாடாக அமைகின்றது. சமூகம் வேறுபட்ட இயல்புடைய மக்கள் குழுக்களின் கூட்டு இணைவின் வடிவமாகும். ஒழுங்கு மீறல்கள் சமூகத்தில் அடிக்கடி ஏற்படும். இவை நடைமுறை சமூக ஒழுங்கிற்கு முரனானவையாகக் கொள்ளப்படும். இவற்றைத் தீட்டாகக் கொள்வர். தூய்மைப் பேணுவதற்கு சுத்தப்படுத்தல் அவசியமானதாக இருப்பது போல புராதன சமூகங்களில் காணப்படும் சடங்குகள் சமூகத்தைப் புனிதப்படுத்துகின்றன என நம்பப்படுகின்றது. மரபு வழிச் சமூகங்களில் காணப்படும் சடங்குகள் யாதேனும் ஒரு வகையில் சமூக ஒழுங்கை-சமூக ஒழுகலாற்றை காலத்திற்குக் காலம் மீள வலியுறுத்துவனவாகக் காணப்படுகின்றன. சமூகம் சடங்குகளைச் செய்வதன் மூலம் அவர்களிடையே உள்ள வேறுபாடுகளை களைந்து, தம்மை மீள் ஒழுங்குபடுத்திக் கொள்கின்றன. இதன்படி சமூக ஒழுங்கை நேர்த்தியாக்கி வாழ்வை நெறிப்படுத்துவதற்கான ஒரு சாதனமாக சடங்குகள் அமைந்திருந்தன.

உலகத்தில் இருப்பவை எல்லாம் ஒன்றோடு ஒன்று பின்ணிப் பிணைந்தவையாகவும் முரன்பாடானதாகவும் காணப்படும். பிறப்பு - இறப்பு, பெண் - ஆண், ஒத்திசைவு – ஒத்திசைவின்மை என்பன வாழ்வில் வேறுபட்டுக் கொண்டு செல்பவையாகக் காணப்படுகின்றன. இந்த எதிர் நிலையில் நல்லதற்கும் கெட்டதற்கும் இடையே நடைபெறும் போராட்டத்தில் ஒன்று வெற்றியடையும். ஒருவரின் சுய அடையாளத்தை வெளிப்படுத்துவதற்கு தீயது கட்டாயமாகத் தேவையானது எனக் கருதுகின்றனர். தீயவற்றை மனிதர் ஊக்குவிப்பதில்லை, மாறாக அதற்கு பயப்படுகின்றனர். இத்தீய விடயங்கள் அதிகாரத்தினை பிழையான வழியில் பயன்படுத்தாமல் இருப்பதற்கும் தவறுகளைத் திருத்தி உணர்ந்து கொள்வதற்கும் அவசியமானதொரு சமூக நுட்பமாக கொள்ளப்படுகின்றன. இச்சடங்குகளும் தீமையில் இருந்து மனிதர்களை மீட்டெடுப்பதற்கு உதவுபன என நம்பப்படுகின்றது. இவ்வடிப்படையிலேயே தீய இயல்புடைய தெய்வங்களை சாந்தப்படுத்தல், அவற்றின் தண்டனைக்காளாகாது தப்பித்து வாழ நினைத்தல் என்பவற்றுக்காக சடங்குகளை மேற்கொள்கின்றனர்.

இந்நிலையில் சடங்குகள் உலகு பற்றியும் வாழ்வு பற்றியும் மக்கள் கொண்டிருந்த தத்துவார்த்த மரபில் வேர்கொண்டனவாக விளங்குகின்றன். உலக ஒழுங்கை சரிப்படுத்தி மனித வாழ்க்கை சரியான வழியில் முன்னெடுத்தல் என்னும் தத்துவார்த்த நோக்கை சடங்குகள் கொண்டுள்ளன.

## 4. அழகியல் அடிப்படைகள்

அழகியல் பற்றிய கருத்துக்கள் தத்துவத்தின் உள்ளடக்கக் கூறுகளில் ஒன்றாகவே வளர்ச்சியடைந்து வந்துள்ளது. தமிழ் மரபில் கலைப் படைப்பு ஏற்படுத்தும் அழகியல் அனுபவம் பற்றிய கருத்துக்களின் அடிப்படையாக தொல்காப்பிய பொருளதிகாரத்தில் அளிக்கப்பட்டுள்ள விளக்கங்களே அமைகின்றன. தொல்காப்பியர் இவ்வழகியல் அனுபவத்தை மெய்ப்பாடு என்கின்றார். கலையைச் இரசிப்பவனுடைய உள்ளத்தில் மெய்ப்பாடு தோன்றுகிறது என்றும்

அம்மெய்ப்பாட்டைத் தோற்றுவிப்பது சுவை என்றும் குறிப்பிடுகின்றார். இச்சுவை அறிதலாகிய ஆற்றலுக்குரியதல்ல, அது உணர்தலாற்றலுக்குரிய விடயமெனவும் எனவும் விளக்கப்படுகின்றது.

தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்பாடும் நாட்டிய சாஸ்திரம் குறிப்பிடும் ரசங்களும் அடிப்படையில் ஒருமைப்பாடுடையன. இதனைவிட இந்திய மரபில் த்வனி என்னும் இலக்கியத்தை இரசித்தலுக்கான ஒரு கொள்கையை முன்வைக்கின்றார். இதனை விட கூத்த நூல் சுவையனுபவம் தொடர்பான சில தகவல்களை முன் வைக்கின்றது. இக்கருத்துக்கள் பெரும்பான்மையும் நிகழ்த்து கலையை அடிப்படையாகக் கொண்டே முன்வைக்கப்பட்டுள்ளன. ஏனைய கலைத் துறைகள் பற்றி எவையும் பேசப்படவில்லை. இது தமிழ் அழகியல் தொடர்பாக நாம் இனங்காணும் பிரச்சினையாகும்.

இவ்வாய்வின் அடுத்த நிலையில் தமிழ் மக்களின் சடங்குகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ் மக்களின் அழகியல் அனுபவம் தொடர்பாக ஆராய முற்படும்.

சடங்குகள் மக்களின் வாழ்வியலில் முக்கியமானதொரு சமூக, சமய நிகழ்வாக நோக்கப்படுகின்றது. சடங்குகளில் தெய்வங்கள் தெய்வ இயல்பு வரப்பெற்று ஆடும். தெய்வ இயல்பைப் பெறும் நிலையை தமிழில் “உருக்கொண்ட நிலை” எனக் குறிப்பிடுவர். இந்நிலை சாதாரண உணர்வுநிலையில் இருந்து மேன்பட்ட ஒரு உணர்வுநிலையாக இருக்கும். இந்த அசாதாரண உணர்வுநிலையைப் பெறுவதும் அந்த உணர்வநிலையின் தாக்கம் சடங்கினை பார்த்துக் கொண்டிருப்பவர்களுக்கு ஏற்படுவதும் சடங்கு வழிபாட்டில் அடிப்படையானதாக அமைகின்றது. இது சடங்கை நிகழ்த்துபவர்களில் இருந்து பார்ப்பவர்களுக்குத் தொற்றிக் கொள்ளும் உருமாற்றீட்டு அழகியல் (Transformative Aesthetics) அனுபவமாகும். இது சடங்குடன் மக்களை இணைப்பதில் முக்கிய காரணியாகத் திகழ்கின்றது.

சாதாரன நிலையில் இருக்கும் மக்கள் சடங்கு நிகழ்த்துகை மேற்கொள்ளும் போது ஒரு சக்தியைப் பெற்றுக் கொள்டு, அக்சக்தியை கொண்டவர்களாக நிகழ்த்துகையில் ஈடுபடுவர். இச்சக்தி சடங்கைப் பார்த்துக் கொண்டிருக்கும் மக்களுக்கு சடங்கு நிகழ்த்துகை மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கும் போது உருமாற்றீடு செய்யப்படும். பார்ப்பவர்கள் பெற்றுக்கொள்ளும் சக்தி சடங்கை நிகழ்த்துவோர் பெற்றுக் கொண்ட சக்திக்கு சமமானதே. எரிக் பிஸ்ச லிட்ச் (Erika Fischer-Lichte) அவர்கள் உருமாற்றீட்டு அழகியல் பற்றிக் குறிப்பிடும் கருத்துக்கள் சடங்கு வழங்கும் இந்த அழகியல் அனுபவததுடன் தொடர்புபடுத்தி நோக்கக்கூடியதாக உள்ளது. நிகழ்த்துவோருக்கு ஒரு சக்தி (Power) உருவாவதும் அச்சக்தி பார்வையாளருக்கு மாற்றியமைக்கப்படுவதும் (Transformative) நிகழ்த்துகை வழங்கும் அழகியலின் அடிப்படையானது என்பது அவரின் கருத்தாக உள்ளது. (2008:11).

இந்த உருமாற்றுச் சக்தி (Tranfomative Power) சடங்கைப் பார்க்கும் மக்களுக்கும் சடங்கை நிகழ்த்துவோருக்கும் ஏற்படும் உள்ளாந்த உணர்வாக, அழகியல் அனுபவமாக கொள்ளத்தக்கது. இதனை ஏற்படுத்துவதில் சடங்கு நிகழ்த்துகைக்கு ஒரு தனி இடமுள்ளது. தெய்வமாடுபவர்கள் இந்த உள்ளாந்த ஆற்றலை நிகழ்த்துகையில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தும் போது பெற்றுக் கொள்கின்றனர். இந்த உள்ளாந்த ஆற்றலைப் பெற்றதன் பின்னரே தெய்வ இயல்பு வரப்பெற்றவர்களாக மாறுகின்றனர். சடங்கைப் பார்த்துக்கொண்டிருக்கும் போது மக்களுக்கு இச்சக்தி மாற்றீடு செய்யப்படுகிறது. மக்கள் நிகழ்த்துகையில் ஈடுபாடுடையவர்களாக இருப்பதற்கு இச்சத்தியை பெறுவது ஒரு அடிப்படையான காரணம். இதனை சடங்கு வழங்கும் அடிப்படையான அழகியலாகக் கருதலாம்.

சடங்கு செயற்பாட்டில் சடங்கை நிகழ்த்தும் தெய்வாதிகள் அவர்களை தாமே தாக்கும் சடகுச் செயற்பாடு அவர்களின் புனிதச் செயலை உறுதிப்படுத்துவதாகவும் அவர்களின் தெய்வீக ஆற்றலை உறுதிப்படுத்துவதாகவும் விளங்குகின்றது. சாட்டையால் அடித்தல், பல்லை நெரு நெரு எனக் கடித்தல் போன்ற உடல் சார்ந்த வன்முறைகள் உடலியல்சார்ந்த உருமாற்றத்தையும் (உடலை தெய்வ தன்மையுள்ளதாக மாற்றுதல்) ஆன்மீ இயல்பையும் ஒன்றாக இணைத்து அனுபவிக்கச் செய்கின்றது. அவர்களை கடவுளுடன் நெருங்குவதற்கு வழியமைக்கின்றன. இவை அவர்களின் ஆத்மாவிற்கும் அறிவை வழங்கி அவர்களின் சிந்தனைக்கு தூய்மையையும்

அவர்களின் ஆண்மீகம் தொடர்பான பேரார்வத்தையும் அதிகரிக்கின்றது. இக்கட்டத்தில் அவர்களின் மனம் அல்லது ஆத்மா தெளிவடைகின்றது. ஆத்மீகநிலை உயர்வடைந்து செல்கின்றது. அவர்களின் தன்னார்வத் (Voluntary) தன்மை தாமே துன்புறுத்திக் கொள்ளும் உடலியல் பலாகாரச் செயலின் நோக்கம் ஆண்மீக ரீதியான உருமாற்றத்தைப் பெறுவதாகவே அமைகின்றது (Ibid, p:14). சடங்குச் செயற்பாட்டாளர் (நிகழ்த்துவோர், பார்ப்போர்) சடங்கில் ஈடுபடுவதன் மூலம் பெறும் அழகியல் அனுபவம் அவர்களின் ஆத்மாவிற்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது.

ரசானுபவத்தின் இறுதி நிலை தொடர்பாக அபிநவகுத்தர் குறிப்பிடும் கருத்துக்கள் இவ்விடத்தில் நோக்கத்தக்கன. ரசவனுபவநிலை சாதாரணமாக நாம் காணும் புலக்காட்சியில் இருந்து வேறுபட்டதாக இருக்கும் ஒரு பொதுமை நிலையாகும். இப்பொதுமை நிலையில் சுவைஞனில் மறைவான உள்ளழுத்த ரீதியில் வேறுபட்டுக் காணப்படும் மனதில் மறைந்திருக்கும் உள்ளழுத்தங்கள் ஒன்றோடு ஒன்று இணக்கம் காண்கின்றன. இந்நிலையை ''சமத்காரம்'' (Camatkara) என அபிநவகுத்தர் அழைக்கிறார். ஆனந்தத்தில் அமிழ்ந்திருக்கும் நிலையென இதனை வரைவிலக்கணப்படுததுகிறார். இது சுவைக்கும் பொருளால் செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் செயல் (1985:60-61). இச்சந்தர்ப்பத்தில் தோன்றுவதெல்லாம் சுவையுணர்வைக் கொண்டிருக்கும் மகிழ்ச்சியேயாகும் என்கிறார்.

மீனாட்சி முருகரத்தினம் அவர்கள் கலையின் நோக்கம் அல்லது பயன் பற்றிக் குறிப்பிடும் கருத்துக்கள் மேற்குறித்த கருத்துக்களுடன் ஒப்புமை உடயனவாக விளங்குகின்றன. ''கலையின் அறிவுறுத்தல் இயல்பு ஒரு பக்கவிளைவு மட்டுமே. அடிப்படையில் கலை மதிப்பை எடையிடத் தேவையில்லை. எனவே ஒரு கலை உயர்ந்த கருத்துக்களை ஏந்தியிருக்க வேண்டுமென எதிர்பார்ப்பதே தவறு. அதை அனுபவிக்கின்ற கணத்தில் அது வழங்கும் இன்பம் மட்டுமே அதன் மதிப்பை எடையிடுவதற்குரிய அளவுகோல். கலை என்பது நம்மைக் கடந்து செல்லும் கணங்களைப் போற்றுதற்குரியதாகச் செய்வதற்குரியனவேயன்றி வேறல்ல'' (1992:22). இதனை தொல்காப்பியம் கூறும் ''சுவை அறிதலாகிய ஆற்றலுக்குரியதல்ல, அது உணர்தலாற்றலுக்குரிய விடயம்'' என்னும் கருத்துக்களுடன் தொடர்புபடுத்தி நோக்கலாம். கலைப்படைப்பை சுவைப்பவன் பெறும் இன்பகரமான அனுபவமானது சடங்கு வழங்கும் அனுபவத்தில் இருந்து வேறுபட்டதல்ல என்பதை இக்கருத்துக்கள் உறுதிப்படுத்துகின்றன.

சடங்குச் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் உருமாற்றுச் சக்தியைப் பெறுவதும் அதன் ஊடாக வரும் அழகியல் அனுபவத்தைப் பெற்று அனுபவிப்பதும் இங்கு அடிப்படையாகின்றது. இந்நிலையில் தமிழர் அழகியல் என்பது சமூகக் கூட்டொருமைப்பாட்டில் பலரும் இணைந்து பெற்றுக்கொள்ளும் அனுபவமாகவே விளங்குகின்றது. இவ்வனுபவம் மக்களின் சாதாரண உணர்வுத்தளத்தில் இருந்து மேம்பட்ட ஒரு உணர்வுத் தளத்திலேயே பெற்றுக் கொள்ளப்படுகின்றது. அந்த உணர்வுத் தளம் உருவாக்கப்படுவதற்கான ஏதுக்கள் அல்லது காரணிகள் கலைப்பொருட்கள், கலை நிகழ்த்துகைகள், புனித சடங்குகள் போன்ற விடயங்களில் ஏதாவது ஒன்றாக அமையலாம்.

## 5. முடிவுரை

தமிழ் மக்களினால் நிகழ்த்தப்படும் சடங்குகள் அவர்களின் சமய வாழ்வில் அடிப்படையாக விளங்குகின்ற. சடங்குகள் மக்களின் தத்துவ சிந்தனையின் நிலைகளனாக விளங்குகின்றன. சடங்குகளை அடிப்படையாகக் கொண்டு அவர்களின் உலக நோக்கு, வாழ்வியல் நோக்கு என்பவற்றை அறிந்து கொள்ள முடியும். சடங்குகளை நிலைக்களனாகக் கொண்டு ஒரு அழகியல் மரபு வளர்ச்சியடைந்துள்ளது. இது தொல்காப்பியர் குறிப்பிடும் மெய்ப்பாடு, அபிநவகுத்தரின் இசானுபவத்தின் இயல்பு பற்றிய கருத்துக்களுடன் தொடர்புடையதாகவே விளங்குகின்றது. இவ்வழகியல் நிலை அதிமேம்பட்ட உணர்வு நிலையில் பெறும் ஒரு ஆனந்த நிலையாகவே விளங்குகின்றது. ரசம், மெய்ப்பாடு என்பன இந்த அழகியல் உணர்வு நிலைக்கு சமாந்தமரமாக அமையும்.

**உசாத்துணைகள்**

கணபதிப்பிள்ளை,க. (1972). மகாமாரித் தேவி திவ்யகரணி. அட்டைப்பள்ளம், மட்டக்களப்பு.

கிருஷ்ணராஜா,சோ. (2007). சங்ககால சமூகமும் சமய-மெய்யியற் சிந்தனைகளும். கொழும்பு, குமரன் புத்தக இல்லம்.

நடராசன், தி.சு. (2016). தமிழ் அழகியல்: மரபும் கோட்பாடும். சென்னை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.

முருகரத்தினம், மீ. (1992). அழகியல் (அல்லது) கலை கலைக்காகவே. சென்னை, உலகத் தமிழாராச்சி நிறுவனம்.

Fischer-Lichte, Erika. (2008). *The Transformative Power of Perfomance : A New Aesthetics*. London & New York, Routledge, Taylor & Francis Group.

Gnoli, Raniero. (1985). *The Aesthetic Experience According to Abhinavagupta*. Varanasi, India, Chowkhamba Sanskrit Series office.

Wright,Robin.M. (2013). "Indigenous Religious Traditions of the World", *Religions of the World: A Cultural Introduction to the Making of Meaning*. Lawrence E. Sullivan, Fortress Press.